172 Regd. No. M. 2797. (விலை அணா ஒன்று.)



VARTHAGA OOLIAN.

Trichinopoly. | Monthly Journal of Commerce, Trade and Industry. | July 1934

மலர் 3.] திருச்சினுப்பள்ளி ஜூலை-மீ -1934 [இதழ் 25

"வர்த்தக ஊழியன்" வருட சந்தா.

உள்நாட்டிற்கு ரூ. 1. வெளி நாட்டிற்கு ரூ. 1—8—0

விளம்பர விகிதம்.

அங்குலம் ஒன்றுக்கு ரூ. 0—8—0.
பக்கம் ஒன்றுக்கு ரூ. 10—0—0.
அரை பக்கத்திற்கு ரூ. 6. ராப்பர் பக்கத்திற்கு ரூ. 25.

முன்பணமில்லாத விளம்பரங்கள் பிரசுரிக்க முடியாது. நீடித்தகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதவும்.

ஆசிரியர்—திரு. டி. வி. கே. நாயுடு.

அட்டவணை.

தேவரின் பொன்மொழி ...	3
சிறுமணித்திரள் ...	4
தொழில் அபிவிருத்தி ...	5
வர்த்தகக்குறி வழக்கு ...	6
திருச்சி வியாபாரிகள் சங்கம் ...	8
உலக விநோதங்கள் ...	10
மதிப்புரைகள் ...	11
உலக வர்த்தகம் ...	13
சாமான்களுக்கு ரயில்வே சார்ஜ்கள் ...	14
மார்க்கட்டு நிலவரம் ...	15
இந்திய வர்த்தகம் ...	16
சிநேகம் ...	17
Trade Secrets ...	20
Mysore Page ...	21
Britain's Expanding Trade ...	23
Series of Failures ...	24

OFFICE OF THE REGISTRAR ... 10 JUL 1934 MADRAS

"VARTHAGA OOLIAN"

Annual Subscription.

Inland Rs. 1—0—0. Foreign Rs. 1—8—0.

Advertisement Tariff Per Insertion..

One inch Rs. 0—8—0. One Page Rs. 10—0—0
Half Page Rs. 6—0—0. Wrapper Page Rs. 25.

Advertisement without prepayment will not be considered. For further particulars write to the Manager.

HULLO! HULLO!!

HOW IS YOUR BUSINESS?

DON'T BE BROKEN HEARTED.

BROAD CAST YOUR BUSINESS.

MESSAGES THROUGH

"VARTHAGA OOLIAN"

AND PROSPER IN TRADE

Apply to:—

Manager, "Varthaga Oolian"

TRICHINOPOLY, SOUTH INDIA.

T.R. ரெங்கசாமி நாயுடு

வர்ணம் & கண்ணாடி வியாபாரம்,

341, 42, பெரியகடைவீதி, திருச்சினாப்பள்ளி.

எம்மிடம் பிரசித்திபெற்ற கம்பெனிகளின் நேர்த்தியான வார்னீஷ் வர்ணங்கள், முகம் பார்க்கும் நிலைக்கண்ணாடிகள், ஜன்னல் கண்ணாடிகள், கலர் கண்ணாடிகள்.

ராஜா ரவிவர்மாவின் அழகிய சித்திரப்படங்கள், ஜெர்மன் & இங்கிலீஷ் லேடி & சீனரி படங்கள், போஸ்டு கார்டு படங்கள், படங்களுக்கு வேண்டிய சட்டம் கண்ணாடிகள் கால் அங்குல வெளிச்ச கண்ணாடிகள் அட்டை, டின் பிளேட் வகைகள்.

திருவிழாக்களுக்கு வேண்டிய கலர் காகிதங்கள், வர்த்தி தகடுகள், கண்ணாடி மணி தினுசுகள், அசல் தங்கம் & வெள்ளி ரேக்குகள் முதலியவைகள் விலை சரசமாயும் நயமானதாயும் கிடைக்கும்.

ஒருமுறை ஆர்டர் கொடுத்து பாருங்கள்.

இனாம்!

இனாம்!!



என் அனுபவ சாஸ்திரீய

தேகாப்பியாச முறை

இது எல்லோருக்கும் இனாமாக அளிக்கப்படும்.

இப்புத்தகத்தில் தேகாப்பியாச முறையைப்பற்றி நன்றாக விவரித்து எழுதப்பட்டிருக்கின்றது. இது தவிர என்னுடையதும் மற்றும் என்னுடைய சிஷ்யர்களுடையதுமான அநேக புகைப்படங்கள் தெளிவாக அச்சிடப்பட்டிருக்கின்றன. எவன் தன் தேகத்தை அபிவிருத்தி செய்து ஆரோக்கியமாக இருக்க விரும்புகிறானோ அவன் இப்புத்தகத்தை வாசிக்க வேண்டும்.

தபால் சார்ஜுக்காக இரண்டு அணா இந்திய போஸ்டல் ஸ்டாம்பு அனுப்பவும்.

பிரபோசர்: **எம். வி. கிருஷ்ண ராவ்,**

உதகமண்டலம், (நீலகிரி.)

சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு.
"வர்த்தக ஊழியன்" வளர்ச்சியுற விரும்பினால் இன்றே உங்கள் சந்தாவை அனுப்பி வையுங்கள், மானேஜர்.

"நாணயம் நனி பேண்"



திருச்சினாப்பள்ளி
1934-ஆம் ஜுலை-மீ

தேவரின் பொன்மொழி.
(Tevar's Golden Advice)

திருச்சியில் சென்ற மாதம் நடைபெற்ற திருச்சி ஜில்லா வியாபாரிகள் சங்கத்தின் முதலாவது ஆண்டுவிழாவில் தலைமை வகித்த திருச்சி முனிசிபல் சேர்மனாகயிருந்த திரு. பி. ரெத்தினவேலு தேவர் வர்த்தகர்களுக்கு பல அரிய பொன் மொழிகளை கூறி யிருக்கின்றார். அவர் செய்துள்ள சொற்பொழிவை மற்றோரிடத்தில் வெளியிட்டிருக்கிறோம். வர்த்தகர்களாயுள்ள ஒவ்வொருவரும் திரு. தேவர் கூறிய வழியைக் கடைபிடித்து நடப்பார்களாயின், வர்த்தக உலகம், தனிச்சிறப்பு பெறுவது உறுதியாகும். வர்த்தகர்களாய் உள்ள அனைவரும் ஒற்றுமை, நாணயம், நம்பிக்கை முதலியவைகளை உண்மையாய் கடைபிடித்து நடக்கவேண்டியது முக்கிய கடமையாகும் மற்றும், வர்த்தகத்திற்கு அடிப்படையாக உள்ளது கல்வியே. அக்கல்வி எவ்வாறிருக்க வேண்டுமென்பதைப்பற்றி திரு. தேவர்

"முக்கியமாக நமது தேச வாலிபர்கள் சர்வ கலாசாலைப் பட்டங்களையே பெரிதெனக் கருதி அல்லும் பகலும் புஸ்தகங்களைக் கரைத்துக் குடித்து, பெற்றோர்களுக்கு வீண் பணச் செலவு வைத்து, பட்டத்தைப் பெற்று, எட்டுச் சுரக்காயாகவீட்டில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். இத்தகைய நிலைமையானது தங்களுக்கும் பயன்படுவதில்லை. தேசத்திற்கும் பயன்படுவதில்லை. முறுக்கான வாலிபப் பருவத்தை வீணாக்கி மனம் தளர்ந்து சோகமுற்றிருந்தால் நாடும், நகரமும், வீடும் என்னாகும்? எல்லோரும்கூடி இந்த நிலைமையை மாற்ற தீவிர முயற்சிசெய்யவேண்டியது இன்றியமையாத காரியமாகும். பெரிய பட்டப் பரீக்ஷைகளில் தேர்தல் பெறுவதே மனித லக்ஷ்யமாக இருக்கக்கூடாது. பட்டம் பெற்றவர் ஒவ்வொருவரும் உத்தியோக வேட்டையிலேயே இருந்தால் தேசம் முன்னுக்கு வருவது மிகவும் கஷ்டம். பகுத்தறிவை உபயோகப்படுத்தவும், உலக ஞானத்தை அறியவும், உள் நாடு, வெளி நாடு விஷயங்களை தெரியவும் அனுகூலமாயுள்ள அளவான கல்வி இன்றியமையாதது. வியாபாரிகளாகிய உங்களில் பெரும்பாலோர் பெற்றோர்களாயிருக்கிறீர்கள். உங்கள் பிள்ளைகளின் படிப்பு விஷயத்தில் தக்க கவனத்தை செலுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் இவ்வளவு சொல்லலாம் என்று மனங்கொண்டேன்".

என்று மிகவும் தெளிவாக எடுத்துக் காட்டி யிருக்கிறார். கலாசாலைப் படிப்பு வர்த்தகத்திற்கு பயன்படுவது சிறிதேயாகும். அதனோடு வர்த்தகத்திற்கு அவசியமான கல்வியையும் கற்றுப்பழக வேண்டும். ஒரு தேசம் முன்னேற்றமடைய வேண்டுமாயின் அதன் வர்த்தகமே முக்கியமாகும் வர்த்தகத்தின் ஜீவநாடி நாணய மாற்றம். வர்த்தகத்தின் மூலமாகவே, ஒரு நாட்டுடன் மற்றொரு நாடும் இணைக்கப்பட்டிருக்கின்றன. நம்மவர்களில் பலர் படிப்பு முடிந்ததும், வர்த்தகத்தில் பிரவேசிப்பதில்லை. துரதிர்ஷ்ட வசமாக நமது இந்திய நாட்டில் படித்தவர்கள் வர்த்தகத் துறையில் பிரவேசிப்பதென்றால் அவர்களுக்கு மிகவும் கஷ்டமாகயிருக்கிறது. திரு. தேவர்

"வெளி நாடுகளில் படித்தவர்கள் எல்லாம் வியாபாரத் துறையிலிறங்கி தீவிரமாக உழைத்து வருகின்றார்கள். நம் நாட்டிலோ வியாபாரம் என்பது படிக்காதவர்களுக்குத்தான் என்றும், படித்தவர்கள் உத்தியோகத்திற்குத்தான் போகவேண்டும் என்ற மனப்பான்மையுமிருக்கிறது. இதை உடனே மாற்றவேண்டும்."

என்று மிக அழகாக சொல்லியிருக்கின்றார். தவிர அயல் நாடுகளில் தங்கள் நாட்டிற்கு தேவையான விளை பொருள்களை நிறுத்திக்கொண்டு வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய பல விளைபொருள்களையும், புதிய கைத்தொழில் சாமான்களையும் உற்பத்தி செய்து அனுப்பி அதனால் நாட்டின் பொருளாதார நிலைமையை ஒருவாறு சமப்படுத்திக் கொள்ளுகிறார்கள். ஆனால் நமது நாட்டிலோ, அடுத்த வீட்டுக்காரன் செய்கிற தொழிலையே, பக்கத்து வீட்டுக்காரனும் செய்வது என்பது வழக்கமாய் விட்டது. அதனால் விளைந்த, உற்பத்தி செய்த சாமான்கள் தக்க விலையாகாமல் இருந்து நாளடைவில் உற்பத்திசெய்த, பணத்திற்குகூட விற்பனையில்லாது போகின்றது. இக்குறையை நிவர்த்திக்க, நமது கவர்ன்மெண்டாரும் சமீபத்தில் "சென்ட்ரல் மார்க்கெட்டிங் ஆபீசர்" என்ற அதிகாரியை நியமனம் செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு மாகாணத்திலும் ஒவ்வொரு உத்தியோகஸ்தரை ஏற்படுத்தி வருகின்றார்கள். அவர்கள் நம் நாட்டில்விளைந்த பொருட்களை, நல்லவிலைக்கு விற்பனை செய்ய வழி தேடுவார்கள். அவர்களால் நமது விவசாயிகளுக்கும், வர்த்தகர்களுக்கும் பல நன்மைகளும் உண்டாகுமென்று எதிர்பார்க்கிறோம்.

இதுவரை வர்த்தகத்திற்கு வேண்டிய சாதனங்களைசொல்லி வந்தோம். இனி வர்த்தகத்தை

சிறுமணித்திரள்.

(Editorial Notes.)

நமது 3-ம் ஆண்டு

நமது "வர்த்தக ஊழியன்" இரண்டாம் ஆண்டைக் கடந்து மூன்றாம் ஆண்டுக்கு இம்மாதம்

சிறப்பாய் நடத்திவருவது விளம்பரமே யாகும். விளம்பரம் செய்வதினால் வீண் செலவு என்பது நமது வர்த்தகர்களில் ஒரு சிலரின் கருத்து. அது முற்றிலும் தவறாகும். விளம்பரம்வர்த்தகத்திற்கு உற்ற தோழனாகும். விளம்பரத்தினால் மேனாட்டார் கோடிக் கணக்கான திரவியத்தை சம்பாதித்திருக்கின்றனர். இது சம்பந்தமாக திரு. தேவர்

> "எந்த வியாபாரத்திற்கும், தக்க விளம்பரம் வேண்டும். ஆரம்பத்தில் இந்தசெலவு கைப் பொறுப்பாகத் தோன்றினும் கடைசியில் நல்ல விளம்பரமே தக்க ஊதியத்தை (லாபத்தை)க் கொடுக்கும். மேல் நாட்டார் வியாபாரத்தின் கொள் முதலுக்கு சமமான தொகையை விளம்பரத்தில் செலவிடுவதை நாம் கண்கூடாக கவனிக்கின்றோம்"

என்று எடுத்துக் காட்டியிருக்கின்றார். உதாரணமாக மேல் நாட்டிலுள்ள, பல சோப் கம்பெனிகளே இதற்கு சான்றாகும். ஆகவே, நம் நாட்டிலுள்ள வர்த்தகர்களும் பல பத்திரிகைகளில் தங்கள் விளம்பரங்களை வெளியிட்டு நல்ல லாபத்தை யடையும்படி வேண்டுகிறோம்.

இறுதியாக திரு. தேவர் அவர்கள் "வர்த்தக ஊழியன்" பத்திரிகை வர்த்தகர்களுக்கு செய்து வரும் தொண்டைப்பற்றி சொல்லியிருப்பதையும் பொதுவாக வர்த்தகர்களுக்கு சொன்ன பொன் மொழிகளின்படியும் நடந்து கொள்வார்களென்று நம்புகிறோம்.

முதல் செல்கிறான் என்பதை நமது வாசகர்களுக்கும் அபிமானிகளுக்கும் தெரிவித்துக்கொள்கிறோம். நாம் எதிர்பார்த்த அளவு, இரண்டாம் ஆண்டில் "வர்த்தக ஊழியனை," ஆதரித்து போஷிக்காவிட்டாலும், புது ஆண்டிலாகிலும் பல துறையில் போதிய ஆதரவளித்து நமக்கும் ஊக்கத்தை கொடுப்பார்களென்றுநம்புகிறோம். அன்பர்கள் ஒவ்வொருவரும் தங்கள் சந்தா பணத்தை முன்பணமாக அனுப்பிவைத்து, தங்கள் நண்பர்களையும் சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொடுக்கும் படிக்கும், வர்த்தகர்களுக்காக உழைக்க முன் வந்திருக்கும் "வர்த்தக ஊழியனை" ஒவ்வொரு வர்த்தகர்கள் கையில் உலவும்படி மூன்றாம் ஆண்டிலாகிலும் நிறைவேற்றிவைக்க வர்த்தகர்களை விநயத்துடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

ரயில் கப்பல் போட்டி

இலங்கை ரயில்வேயில் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு அனுப்பப்படும் அரிசிக்கு தலைமன்னார் ஸ்டேஷனிலிருந்து கொழும்பு ஸ்டேஷனுக்கு டன் ஒன்றுக்கு மைல் ஒன்றுக்கு மூன்று சதம் வீதம் சார்ஜ் செய்யப்படுகிறதென்றும் இலங்கையிலேயே விளையும் அரிசிக்கு அதே தூரத்திற்கு நான்கு சதம் வீதம் வசூலிக்கப்படுகிறதென்றும் இலங்கைசட்ட சபையில் எடுத்துக் காட்டப்பட்டது. ரயில்வே மூலமாக அதிகவருமானத்தை எதிர்பார்த்து கப்பல் மூலமாக குறைந்த சார்ஜில் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்ததை தடுக்க இவ்விதம் செய்ததேயன்றி தென்னிந்திய அரிசிக்கு சலுகை காட்டவேண்டுமென்ற எண்ணம் அவர்களிடமில்லையென்றும் சார்ஜ் குறைத்ததினால் லட்சக்கணக்கான ரூபாய் அதிக வருமானம் கிடைத்ததிலிருந்தும் அவர்கள் தெரிந்துகொள்வார்களென்று நம்புகிறோம். இதே போல் இந்தியாவிலும் கோதுமை ஏற்றுமதியில் கராச்சியிலிருந்து சென்னைக்கும், லயால்பூரிலிருந்து கல்கத்தாவுக்கும் அரிசி தான்யம் ஏற்றுமதியில் காக்கினாடாவிலிருந்து மலபார் துறைமுகங்களுக்கும் சார்ஜ்கள் குறைக்கப்பட்டு ரயில் மூலமாக அதிக ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதையும் ஞாபகமூட்டுகிறோம்

டோல்கேட் அவசியமா

சென்னை மாகாணத்தில் டோல் கேட்டுகளை எடுத்துவிட்டதினால் வர்த்தகர்களுக்கும் மற்றவர்களுக்கும் மிகுந்த சௌகர்யமேற்பட்டது. மைசூர் சமஸ்தானத்தில் டோல்கேட்டுகளை எடுக்கக்கூடாதென்றும் முனிசிபல் எல்லைக்குள்ளிருப்பவைகளை நீக்கி மற்றவைகளை கவர்ன்மெண்டார் நிர்வகிக்க வேண்டுமென்றும் தீர்மானித்திருப்பதாக தெரிகிறது. மைசூர் சமஸ்தானம் எல்லா விஷயங்களிலும் முன்னேற்றமடைந்து வந்தும், இவ்விஷயத்தில் மட்டும் டிப்டி கமிஷனர்களில் பலர் எதிரிடையாக தெரிவித்திருந்தும் கவர்ன்மெண்டார் மேற்கண்ட அபிப்பிராயத்தை தெரிவித்தது வருந்தத்தக்கதேயாகும்.

பலே தென்னாடு.

உலகத்திலே பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் காப்பி விளைவு 12,000டன்னிலிருந்து 50.000 டன்னுக்கு உயர்ந்துவிட்டது. உலக விளைவு 2,000,000 டன், கென்யா, உகாண்டா, தங்கனியக்கா முதலான இடங்களில் காப்பி விளைவு அபிவிருத்தி செய்யப்பட்டதே அதிக விளைவுக்கு காரணம். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் காப்பி விளையும் தேசங்களில் தென்னிந்தியா முதல் ஸ்தானத்தை அடைந்திருப்பதை கேழ்க்க மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம்.

தொழில் அபிவிருத்தி.

(Industrial Advancement)

விநாடிக்கு 8000-புகைப்படம்.

ஜெர்மனியில் ஒருவர் நவீன சினிமாப் புகைப்படம் பிடிக்கும் கருவியொன்று கண்டு பிடித்திருக்கிறார். இதைக்கொண்டு ஒரு விநாடிக்குள் 8000-புகைப்படங்கள் எடுக்க முடியும். மழை பெய்தால், மழைத்துளிகள் விழும் வேகத்தில் அப்படியே புகைப்படம் பிடித்துவிட முடியும். இதனால் சினிமாப்படங்கள் தயாரிப்பதற்கு அதிக அனுகூலங்களிருக்கின்றன.

* * *

முட்டையிலிருந்து குஞ்சு பொரிப் பதைப் படம் பிடித்தல்

ஐக்கிய அமெரிக்காவிலுள்ள ஒரு ஆராய்ச்சி மாணவர் புதிதாக ஒரு முறையைக்கண்டு பிடித்திருக்கிறார். அம்முறையின் மூலம் முட்டையினின்றும் குஞ்சு எப்படி வெளிப்படுகின்றதென்பதைப் பூரணமாகப் படம் பிடித்துவிடச் சாதகமாய் இருக்கிறது. ஒரு முட்டையை எடுத்து அதன்மேல் தோலைச் சிறிது அப்புறப்படுத்தியபின் காக்கைப் பொன்னை அந்தப் பாகத்தில் ஒட்டிவிடுகிறார். இதனால் முட்டைக்குள்ளிருக்கும கரு வளரும் விதம் விகிதப்படுகிறது.

* * *

வாயினுள் அடங்கும் போட்டோ காமிரா

வாயில் போட்டு ஒருவன் எளிதாய் விழுங்கிவிடத்தக்க அளவு சிறிதாகவுள்ள போட்டோ காமிராகண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இரைப்பையின் உட்புறத் தோற்றங்களைக் காட்டும் 16 படங்களை ஒரேசமயத்தில் அந்தகாமிராவால் எடுக்க முடிகிறது. இரண்டு அங்குல உருண்டைக் குழாயில் அந்தக்காமிராவும், படம் பிடிக்கும் தாள் சுருளும், மிக நுண்ணிய வெளிச்சக் குமிழும் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றன ஒளிக்குமிழில் 20,000 மெழுகுவர்த்தி வெளிச்சம் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த நுண்ணிய காமிரா வைத்தியத் தொழிலுக்கு மிகவும் உபயோகமுள்ளதாக விருக்கிறது. அதன் உதவியால்இரைப்பையின் உட்புறத்தில் தோன்றும் புண்கள், கட்டிகள் முதலியவைகளின் நிலைமைகளை எளிதில் அறிந்து கொள்ளுகிறார்கள்.

* * *

நீரை வெட்டியெடுக்கும் விநோதம்.

பூமிக்கு அடியில் சுரங்கங்களை வெட்டிக்கொண்டு போகும்போது நீர் ஊற்று அதிகமாகவிருந்தாலும், அதை இறைப்பதற்கு இயந்திர சாதனம் போதாமலிருந்தாலும், பூமிக்குள் குழாய்கள் செலுத்தப்பட்டு அவைகளின மூலமாய் அந்நீர்ப்பகுதிகள் எல்லாம் பனிக்கட்டிகளாக உறையும்படி செய்யப்படுகின்றது. பின் அவை கற்களைப்போல வெட்டி வெளியேற்றப்படுகின்றன. இவ்வற்புதவேலை லண்டன் விஞ்ஞானக் காட்சியில் செய்துகாட்டப்பட்டது.

* * *

புதிய உலோகம்.

ஓர் வாலிப இத்தாலிய இரசாயன சாஸ்திரி 93-ம் உலோகமொன்றைக் கண்டு பிடித்திருக்கின்றனராம். இந்த உலோகம் "யூரேனியம்" என்னும் லோகத்துடன் "நியுறன்ஸ்" என்னும் லோகத்தை மின்சாரத்தினால் கலக்கச் செய்வதினால் உண்டாகின்றதாம். இது சாதாரணமாக இயற்கையில்நடை பெற்று வருகின்றதெனவும், உலகத்தில் புதிது புதிதாக இயற்கையே புதிய லோகங்களை எற்படுத்துகின்றதெனவும் ஷை சாஸ்திரியார் கூறுகின்றார்.

* * *

போலி கண்ணுக்கு மின்சாரமூளை.

அமெரிக்காவில் நியூஜெர்சி நகரில் வசித்துவரும் பேர்பெற்ற டாக்டர் விலாடிமீர் ஜுவோரிகின் ஒருவித அபூர்வ போலிக்கண் கண்டு பிடித்திருக்கிறார். இந்தக்கண்ணுக்குள் மின்சார சக்தியைக் கொண்டு ஒருவித மூளையையும் உண்டு பண்ணியிருக்கிறார். இந்தப் போலிக் கண்களை அணிந்துகொண்டால், இயற்கைக் கண்ணுக்கும் அதற்கும் வித்தியாசமே கண்டுபிடிக்க முடியாது. அன்றி அந்தக்கண் எதைக்காண்கிறதோ, அதை மின்சார சக்தியாலான மூளையைக் கொண்டு அப்படியே புகைப்படம் பிடித்துக் கொள்ளுகிறது. இந்தக் கண்ணுக்குள் மின்சார ஒளியின் சக்தியும் மகா அபூர்வமானது. ஏனெனில் அந்த ஒளியைக் கொண்டு எவ்வளவு நுட்பமான கிருமியையும் காண முடியுமென அவர் கூறுகிறார்.

* * *

கண்களை மூடிக்கொண்டு படிக்க வழி.

கனடா தேசத்தில் ஒரு டாக்டர் கண்களை மூடிக்கொண்டு படிப்பதற்கு உதவி செய்யக்கூடிய ஒரு நூதன கருவியை கண்டுபிடித்திருக்கிறார். அது எக்ஸ்-ரே என்னும் அற்புதக் கதிரொளியின் உதவியால் ஆக்கப்படுகிறதாம். கண்ணோய் கொண்டு ஒருவனுடைய கண்களுக்கு முன்பு அத்துண்டு உலோகத்தைப் பொருத்தி வைத்தால் அவன் நன்றாகப் படிக்கிறானாம். நேத்திர சிகிச்சைக்காரர்களும் நரம்புச் சிகிச்சைக்காரர்களும் நரம்புச் சிகிச்சைக்காரர்களும் இப்புதிய நூதனத்தை மிகவும் விரும்பி வரவேற்கிறார்களாம்.

* * *

காதலை அறியும் விநோதக் கருவி

பெல்கிரேடிலுள்ள ஒரு விஞ்ஞான சாஸ்திரி காதலை அறிவிக்கும் கருவியொன்றைக்கண்டுபிடித்திருக்கிறார். இக்கருவியின் உதவியால் காதலரிருவரின் காதல் வேட்கை எவ்வளவிருக்கின்றதென்பதை அறியலாமாம், விவாகம் செய்துகொள்ள விரும்புவோரை இக்கருவியால் முதலில் பரிசோதனை செய்யப்படும். இருவரின் காதல் அளவும் சரியாயிருக்குமானால்தான் விவாகம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள். பெல்கிரேட் நகரிலுள்ள ஆண்களும் பெண்களும் இனி விவாகஞ் செய்துகொள்வதாயின் இக்கருவியின் பரிசோதனைக்கு முதலில் அவர்கள் ஆளாகவேண்டும். இக்கருவியின் பரிசோதனையில் தோற்றவர்கட்கு விவாக அநுமதி அளிக்கப்படமாட்டாது.

* * *

நீரினால் கல்லுடைத்தல்.

சிஜிகோ வென்னும் ருஷிய இஞ்சினீர், நீரின் மிகையான வேகத்தின் உதவியினால் கற்களை உடைத்து நொறுக்குவதற்கு ஒரு நூதனவழியைக் கண்டுபிடித்திருக்கிறார். அம்முறையினால் பனிப் பிராந்தியங்களில் பாதைகளை வெட்டவும், மலைப் பிரதேசங்களுக்குள் வழிகாணவும் கூடுமென்று பிரத்தியக்ஷமாய்க் காட்டப்படுகிறது. நீரின் அபாரமான வேகம் குழாய்களின் வழியே செலுத்தப்பட்டு இயங்குகிறது,

* * *

சோப்புக் குமிழி கண்ணாடி.

சோப் குமிழியின் பருமனை யொத்த அளவுக்குக் கண்ணாடிகள் செய்யப்படுகின்றன. ஒரு அங்குலத்தின் 10000 பாகங்களில் 2 பங்கு கனத்தில் செய்யப்படுகிறதாம். சாதாரணக் கண்ணாடியில் ஊடுருவிச் செல்லமுடியாத அல்ட்ரா வயோலட் வெளிச்சம் அதன் மூலமாகச் செல்லுமாம்.

சாக்லட் ஹல்வா.

காட்லீவர் எண்ணெயைக் கற்கண்டைப் போல இனிக்கும் பண்டமாக்கி இருக்கிறார்கள். அந்த எண்ணெயுடன் கொக்கோவைச் சேர்த்து அதைச் சாக்கோலெட் ஹல்வா போலச் செய்திருக்கிறார்கள். அதில் அதன் இயற்கை உருசியோ மணமோ கண்டுபிடிக்க முடியாது. என்றாலும் அதன் ஆரோக்கிய சத்து சிறிதும் அகற்றப்படுவதில்லை.

ஆகாசவாண தபால்.

தபால் இலாகாவில் கடிதங்களையும், பார்சல்களையும், ஆகாய வாணங்களின் மூலம் அனுப்ப ஒரு புதிய முறை அமெரிக்காவில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாணத்தில் சக்தி வாய்ந்த எரிமோட்டார்ப் பொறியும், விறகு அறைகளும், பாதுகாப்புக் குடையும், இருக்கும். அவ்வாணம் ஆகாய வழியே செலுத்தப்பட்டவுடன், மோட்டாரிலுள்ள எரிவாய்வுகள் மகா வேகத்துடன் உந்தித் தள்ளுகிறது.

முகர்ந்து பார்க்க இயந்திர மூக்கு

மூக்கின் முகரும் சக்தியைப் பன்மடங்கு அதிகமாக்கிக் காட்டக்கூடிய இயந்திர மூக்குச்சாதனம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது ரசாயனமுறைகளால் கண்டுபிடிக்கப்பட வேண்டியிருக்கும் வாசனைகளை அச்சாதனத்தால் லட்ச மடங்கு சீக்கிரத்தில் அறிந்து கொள்ள முடியுமாம். அம்முறைரசாயன ஆராய்ச்சிக்காரர்களின் மூக்கு சோர்வடையாமலிருக்கும் பொருட்டு காப்பாற்றப்படுவதற்காக அமைக்கப்பட்டிருக்கிறதாம். மூக்கு வெகு சீக்கிரம் சோர்வடைந்து போகக்கூடிய தன்மை பெற்றதென்று அவ்வறிஞர் கூறுகிறார்.

ஏஜண்டுகள் தேவை.

"வர்த்தக ஊழியன்" பத்திரிகைக்கு சந்தாதாரர்கள் சேர்க்கவும், விற்கவும் விளம்பரங்கள் சேகரிக்கவும் செல்வாக்குள்ள ஏஜண்டுகள் முக்கிய பட்டணங்களில் தேவை.

வர்த்தக ஊழியனைப்பற்றி.

அரசாங்கமும் இவ்வுலகமும் இயக்கப் பெறுவது வர்த்தகம் ஒன்றிலேயாம். வர்த்தகம் இன்றேல் இக்காலத்தில் ஒன்றுமில்லை என்பது ஊர்ஜிதம். ஆதலால் உலக வர்த்தக விஷயங்களையும் ஒவ்வொரு மக்களும் தெரிந்து கொள்ள வேண்டுவது அத்தியாவசியமாகும் நாமறிந்தவரையில் வர்த்தக விஷயங்களை தெளிவாக எடுத்துக் கூறுவதற்காக தனிப் பத்திரிகையாகவும் சிறந்த முறையிலும் தற்காலம் வெளிவருவது திருச்சி "வர்த்தக ஊழியன்" ஒன்றேயாம் உலக வர்த்தமானங்களும் சிறு கதை தொடர் கதைகளும் வர்த்தக ஆராய்ச்சிகளும் இதில் காணப்படுகின்றது. ஆங்கிலத்திலும் பல வியாசங்கள் காணப்படுகிறது. வருடசந்தா ரூ. 1—0—0. தனிப்பிரதி அணா 1—சீர்திருத்தம்.

வர்த்தகக்குறி வழக்கு.

(Infringement of Trade Mark.)

சென்னை ஜெனரல் பாட்டர்ஸ் ரோடிலிருக்கும் போனிக்ஸ் எரியேட்டட் வாடர் கம்பெனி என்ற சோடா கம்பெனியின் சொந்தக்காரராகிய ஜனாப் ஜே. எச். ஈரானி என்றவர் சார்பாக அட்வகேட் திரு. டி. எ. ஸ்ரீனிவாசன் திருவல்லிக்கேணி நாகப்பய்யர் தெருவில் மேஹன் கம்பெனி என்ற சோடா கம்பெனியின் சொந்தக்காரர்களாகிய ரூப்சிங், அமார்சிங் என்ற இருவரும் போனிக்ஸ் கம்பெனியார் தயாரித்து வரும் விம்டோ என்ற பானத்தைப் போலவே தயாரித்து விற்பனை செய்து வருவதாகச் சொல்லி, எழும்பூர் போலீஸ் கோர்ட்டு 3-வது மாஜிஸ்திரேட் திரு. என். கோயில்பிள்ளை முன்பாக பிரியாது தாக்கல் செய்திருக்கிறார்கள். பிராதில் கண்டதாவன:—மாஞ்செஸ்டரிலுள்ள நிக்கல்ஸ் என்ற கம்பெனியார் தயார் செய்துவரும் விம்டோ என்றபானத்தை வாதி சென்னையில் விற்றுவருகிறார். இந்த பானத்தின் வியாபாரக் குறிப்புகளும், சின்னங்களும், மேற்படி நிக்கல்ஸ் கம்பெனியாருக்கே சொந்தமானது. அவர்கள் அந்த குறிப்புகளை இங்கிலாந்திலும், இந்தியாவிலும் ரிஜிஸ்டர் செய்திருக்கிறார்கள். அவர்கள் தயாரித்துவரும் விம்டோ என்ற பானம் மிக பிரக்யாதி பெற்றிருக்கிறது. அதற்காக அவர்கள் ஒருவித பிரத்தியேக சீசாக்களை தயார் செய்திருக்கிறார்கள். இப்படிக்கிருக்க எதிரிகள் விம்டோ என்ற பானத்தை தயாரித்து வாதிக் கம்பெனியாரின் வியாபாரக் குறிப்புகளைப் போலவும், சீசாக்களைப் போலவும் தயாரித்து விற்றுவருகிறார்கள். விம்டோ என்ற சீசாவின்மேல் ஒட்டியிருக்கும் லேபில்களைப் போலவே எதிரிகளும், லேபில்களை உபயோகித்துவருகிறார்கள் எனவே இதனால் எதிரிகள் விற்கும் பானம் வாதியால் தயாரிக்கப்பட்ட பானமென்று பொதுஜனங்கள் நினைத்து எமாந்து போகக்கூடும். இந்த வழக்கை மாஜிஸ்திரேட் எற்றுக் கொண்டு எதிரிகளுக்கு சம்மன் பிறப்பிக்கும்படி உத்திரவிட்டிருக்கிறார்.

* * *

தீக்குச்சி எதிர்வரி

தீக்குச்சி எதிர்வரி சம்பந்தமாக இயற்றப்பட்ட விதிகளில், தீப்பெட்டியிலிருக்க வேண்டிய குச்சிகளின் தொகை, தீப்பெட்டிமீது ஒட்டவேண்டிய சர்க்கார் முத்திரைச்சீட்டு, இவை சம்பந்தமாக சில திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்தியாவிலிருந்து வெளியிடங்களுக்கு எற்றுமதி செய்வதாயிருந்தாலன்றி மற்றப்படி ஜூலை 15-ந்தேதிக்குப்பின் உற்பத்தி செய்யப்படும் தீப்பெட்டிகளில் 80 குச்சிகளுக்குமேல் இருக்கக்கூடாது. சட்டத்தின் 8-வது பிரிவுப்படி ஒவ்வொரு பெட்டிமீதும் ஒட்டவேண்டிய (நாடாவைப் போன்ற) முத்திரைச் சீட்டு நாவிக்கிலுள்ள சர்க்கார் காரியாலயத்திலிருந்து வெளியிடப்பட்டதாக இருக்கவேண்டும். அந்தச் சீட்டுகள் 40, 60, 80 என்று பலமாதிரி குச்சிகளுக்கேற்றபடி அச்சிடப்பட்டிருக்கின்றன. குடிசைத் தொழில் முறையில் உற்பத்தி செய்யப்படும் தீப்பெட்டிகளுக்கு வரியில் ஒரு பகுதி ரிபேட்டாகத் திருப்பித்தரப்படும். குச்சிகளின் தொகை தெளிவாகத் தெரியும்படியும், சீட்டைக்கிழித்தாலன்றி பெட்டியைத் திறக்க முடியாதபடியும், முத்திரைச் சீட்டின் இருபுறத்திலும் பண்ட உற்பத்திக்காரரின் முத்திரையிருக்கும்படியும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

* * *

நிலக்கடலை (Ground nut)

சென்னை மாகாணத்தில் மகா யுத்தத்திற்கு முன் 10 லட்சம் எக்கர் நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டது. 1933-34ம் வருடத்தில் 38 லட்சம் எக்கர் குண்டூர் ஜில்லாவில் 1930-வருடத்தில் 1700 எக்கர் 1933ம் வருடத்தில் 320,000 எக்கர் விலை குறைவாகயிருந்தாலும் கிஸ்துகாலத்தில் பணம் தட்டுபடாமல் கிடைக்கிற காரணத்தைக் கொண்டு இதை சாகுபடி செய்கிறார்கள்.

N. M. ALLYMARICAN & CO.,

Sanjeevi Sultania Medical Hall,

PORTO-NOVO, S. A. DIST. (INDIA.)

கனவான்களே! முக்கியம்!! கவனியுங்கள்!

ஒரே வேளையில் குணந்தெரியும்.

மன்மத சிங்கம்போல் செய்திடும் மெடல்பெற்ற

சுல்த்தானியா

சிட்டுக்குருவி சத்தின் லேகியம்.

இந்த சுல்த்தானியா சிட்டுக்குருவிசத்தின் லேகியத்தைப்போல்
மற்ற வைத்தியர்கள் செய்துகோடுத்தால் ரூ. 2000 இனும்.

நண்பிற்குகந்த அன்பர்காள்! அருமையும், பெருமையும், கீர்த்தியும் பெற்ற இந்த அற்புத குணந்தங்கிய லேகியத்தை உபயோகித்த உத்தமர்கள் மணவாழ்க்கையில் சுகானந்த இன்பத்தைஅடைவார்கள். ஆஹா! குணத்தால் சிறந்ததுதான் என்று இதனைப் பன்முறையும் புகழ்வார்கள்.

இந்த லேகியம் அசல் பாகத்திற்கோர் விகற்பமின்றி தங்கம், வெள்ளி, கெம்பு, பவழம் ஆகிய பஸ்பம் செந்தூரங்களும் அம்பர், கஸ்தூரி குங்குமப்பூ, எட்டுவித மிஸ்ரிகள், பத்துவகை விதைகள், எழுவகைமூலிகை சூரணங்கள், ஐந்து வேர் வகைகள் மற்ற அருமையான சரக்குகள் (192-ம்) நிறையளவு குறையாது படி பாகஞ் செய்து வாலையந்திரத்திலிறக்கிய சிட்டுக்குருவி சத்தும் சேர்த்து பாகமாய்ச் செய்யப்பெற்றது.

லேகியத்தின் குணமாவன:— வாதபித்த சிலேத்ம மிகுதிக் குறைவால் ஏற்படும் ரத்தக் குறைவு பல ஹீனம் அஸ்தி வெட்டைச்சூடு, இந்திரியம் ஜலம்போல் நீற்று சிற்றின்பத்திலும், தூக்கத்திலும் அதிகமாய் வெளிப்படல் மணவாழ்க்கையில் சீக்கிரம் வெளியாகிவிடுதல், தாது நஷ்டம், நரம்புத் தளர்ச்சி, சதா இடுப்பு வலி, மலச்சிக்கல் பசி மந்தம் பித்தாதிக்க உஷ்ண வாய்வு, கிருமிரோகம், துர்நீர் வியாதிகள் தேகத்தில் ஓடித்திரியும் பலவித வாய்வு ரோகம், பார்சவாய்வு, நெஞ்சுவலி, விரைவாதம், கைகாலசதி, மயக்கம், மறதி, ஆண்தன்மை நாளுக்குநாள் குறைத்தல் முதலியன நிவர்த்தியாகிவிடும். தேக உஷ்ணத்தை சமனப்படுத்தி இரத்தத்தை விருத்தி செய்து நரம்புகளில் ஓடச்செய்து சப்ததாதுக்களேயும் வலுப்படுத்தி நீற்றுப்போன தாதுவைக்கெட்டிப்படுத்தி ஆண் தத்துவத்தை விர்த்தி செய்து புத்தி சாதுர்யத்தை கொடுத்து சிற்றின்பம் நுகர தத்துவரீ கமிழந்த கிழவர்களேயும் பால்ய பருவ ஆண்சிங்கமாக்கிவைக்கும். ஸ்திரீ சம்மன்னராய்வாழும் புருஷர்களுக்குப் பால்ய பருவ துர்ச்செய்கையால் நடுப்பிராயத்தில் ஏற்படும் தாது நஷ்டத்தை மறுபடியும் உண்டாக்குவதற்கு இதைவிட மருந்து வேறில்லை. கிழவர்களேயும் இந்த லேகியம் இல்லற இன்பத்தை அனுபவிக்கும்படி செய்கிறது. ஒருதடவை பரீக்ஷை செய்துபாருங்கள்.

40நாள் 80வேளை 16பலம் டப்பி விலை ரூ. 12. 20நாள் 40வேளை 8-பலம் டப்பி விலை ரூ 6-0-0
12நாள் 24வேளை 5பலம் டப்பி விலை ரூ. 3-8-0. 8நாள் 16வேளை $2\frac{1}{2}$பலம் டப்பி விலை ரூ. 2
வி. பி. செலவு வேறு.

மெடல்பெற்ற

நல்லமுத்து பஸ்பம்.

இந்த பஸ்பத்தைப்போல செய்துகொடுத்தால் ரூ. 3000 இனும்.

இந்த அருமையான பஸ்பத்தை காலை மாலை உபயோக விபரப்படி சாப்பிட்டு வந்தால் வெட்டை, உஷ்ணத்தினால் சுக்கிலம் உடைந்து தானே வெளிப்படுதலுமாகிய சுக்கில பலமிழந்தவர்களுக்கும், இரத்தக்கொதிப்பு, காங்கை உள்வேகாளம், அழலை, புண், வாய்வேக்காடு, மேகச்சூடு உள்ளவர்களுக்கு பூரண சுகத்தைக் கொடுப்பதுடன் நாடி நரம்புகளுக்கு வலுவைக் கொடுத்து சுக்கிலத்தை கெட்டிப்படுத்தி தேகத்திற்கு நல்ல பலத்தையும், இரத்த விர்த்தியும் தாது புஷ்டியும் உண்டாக்கும். ஒரு மனிதன் வயது 20-க்குள் நாதத்தை பலவிதத்திலும் செலவிட்டு 40-வயதுக்குள் கிழவனைப்போல் நின்று தயங்குகிறார்கள். நம் தேகத்தை வலுப்படுத்தி காப்பாற்ற வேண்டுமென்றால் அகஸ்தியர் தயார்செய்த நல்லமுத்து பஸ்பத்தை 40-நாள் ஒருமண்டலம் சாப்பிட்டால் நம் திரேகம் உடையாமல் கடவுள் கிருபையால் வாழ்ந்திருக்கலாம்.

40-நாள் 80வேளை பஸ்பம் ரூ. 50. 14நாள் 28வேளை பஸ்பம் ரூ 20. வி. பி. சிலவு வேறு.

எமது விலாசம்:—
N. M. அல்லிமரைக்காயன் & கம்பெனி,
சஞ்சீவி சுல்தானியா வைத்தியசாலை
பரங்கிப்பேட்டை P. O.
தென்னாற்காடு ஜில்லா, (இந்தியா.)

பினங்கு சோல் ஏஜண்டு:—
ஹாஜி A. S. காதர்ராவுத்தர் & கம்பெனி.
நெ. 80, சோலியா ஸ்டிரீட்,
பினங்கு, S. S.

திருச்சி ஜில்லா வியாபாரிகள் சங்கம்.

Trichy Merchants' Association Anniversary.

திருச்சினாப்பள்ளி ஜனரல் மார்க்கட்டு திருச்சி வியாபாரிகள் சங்கத்து முதல் ஆண்டு விழா ஜூன்மீ 4-உ மாலை 4-மணிக்கு ஆரம்பமாகியது ஏராளமான வியாபாரிகளும் பொதுமக்களும் கூடியிருந்தனர். ஆண்டு விழாவின் கூட்டத்துக்கு முனிசிபல் சேர்மென் திரு. பி. ஆர். தேவர் அக்கிராசனம் வகித்தார் அக்காலை திருநெல்வேலி முனிசிபல் சேர்மென் திரு டி ரெங்கநாத முதலியாரும் வந்திருநதார் திருச்சி முனிசிபல் சபை அங்கத்தினர்கள் சிலரும் பிரசன்னமாயிருந்தனர். டைமன் ஜூபிலி தோட்டத்தில் தேனீர் விருந்து முதன் முதலில் நடத்தப்பட்டது. வந்திருந்த பிரமுகர்கள் அதனில் கலந்துகொண்டனர். விருந்து முடிந்ததும் கூட்டத் தலைவர் திரு. பி. ஆர். தேவர் ஊர்வலமாக மார்க்கட்டுக்குள் அழைத்துச்செல்லப்பட்டார். மார்க்கட்டின் மத்தியில் அமைக்கப்பட்டிருந்த பந்தலில் கூட்டம் ஆரம்பமாகியது. முதலில் காரியதரிசி திரு. வி. அளகிரிசாமிநாயுடு தலைவருக்கு வாழ்த்து பத்திரம் வாசித்துக்கொடுத்தார். பின்னர் வாழ்த்துப்பாக்கள் பாடப்பட்டன. வருடாந்திர அறிக்கையை காரியதரிசி படித்தார். பின்னர் திரு பி. ஆர். தேவர் கீழ்கண்டவிதமாக பேசினார்.

திரிசிரபுரம் தமிழ் வியாபாரசங்கத்து தலைவர் அவர்களே! அங்கத்தினர்களே! சகோதரர்களே! இன்று நடக்கும் வருடபூர்த்திவிழாவிற்கு தலைமைவகிக்கும்படியாகத் தாங்கள் கேட்டபோது அப்பதவியை வகிக்க எவ்விதத்திலும் நான் அருகனல்லன் என்று எனக்கு மனப்பூர்வமாக தெரிந்திருந்தும், தாங்கள் என் மீது வைத்திருக்கும் அளவுகடந்த அன்பிற்கும், அபிமானத்திற்கும், கட்டுப்பட்டு ஒப்புக்கொண்டேன். அவ்வாறாக ஒப்புக்கொள்வதற்கு மற்றொரு காரணமும் உண்டு சமீபத்தில் இந்நகரில்நடந்த ஒரு பெருஞ் சம்பவத்தில் நீங்கள் எல்லோரும் ஒரே மனதாக எனக்குச் செய்த பெரும் உதவிக்கு என்னுடைய மனப்பூர்வமான நன்றியறிதலை தங்களுக்குத் தெரிவிக்கவேண்டும் என்பதும் நான் என் வாழ்நாளில் எந்தநாளை மறந்தாலும் 1934ம் வருடம் மே மாதம் 25ம் தேதி வெள்ளிக்கிழமையை மறக்கவே முடியாது. தோன்றாத் துணையாக இருந்து தாங்கள் செய்த பெரும் உதவிக்கு என்னால் என்ன கைம்மாறு செய்தல் முடியும்? தாங்கள் என்மீது வைத்துள்ள பூர்ண நம்பிக்கைக்குப் பாத்திரனாகி என்னால் இயன்றவரையில் என் கடமையை சரிவர செலுத்திவருவேன் என்ற உறுதிப்பாட்டை இச்சங்கத்தில் பகிரங்கமாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவ்வாறு செய்ய மேலும், மேலும், தங்கள் குன்றா ஒத்துழைப்பையும், ஆதரவையும் நான் தேடியவனாகயிருக்கிறேன்

நிற்க இந்நகரில் தமிழ் வியாபாரிகள் சங்கம் என்பதை ஸ்தாபித்து கடந்த இரண்டு வருஷங்களாக நீங்கள் ஒற்றுமையாய் இருந்து நடந்து வந்ததைக் கண்டு நான் அதிக சந்தோஷமடைகிறேன். வியாபாரிகளுக்குள் இத்தகைய சங்கம் நடந்துவருவது பலவகையிலும் பாராட்டத்தக்கதே. தற்கால நாகரீகப் புரட்சியில் வேலையில்லாத் திண்டாட்டம் உலகமெங்கும் பரவி, தலைசிறந்த அரசாங்கங்களையும்கவலைக்கு உள்ளாக்கிவிட்டது. முக்கியமாக நமது தேச வாலிபர்கள் சர்வகலாசாலைப் பட்டங்களையே பெரிதெனக்கருதி அல்லும் பகலும் புஸ்தகங்களைக் கரைத்துக் குடித்து, பெற்றோர்களுக்கு வீண்பணச் செலவுவைத்து; பட்டத்தைப் பெற்று ஏட்டுச்சுரக்காயாக வீட்டில் உட்கார்ந்து கொண்டு இருக்கிறார்கள். இத்தகைய நிலைமையானது தங்களுக்கும்பயன்படுவதில்லை. தேசத்திற்கும் பயன்படுவதில்லை. முறுக்கான வாலிபபருவத்தை வீணாக்கி மனம்தளர்ந்து சோக முற்றிருந்தால் நாடும், நகரமும், வீடும் என்னாகும்? எல்லாரும்கூடி இந்நிலைமையை மாற்ற தீவிர முயற்சி செய்யவேண்டியது இன்றியமையாத காரியமாகும். பெரிய பட்டப்பரீட்சைகளில் தேர்தல் பெறுவதே மனித லட்சியமாகமிருக்கக் கூடாது. பட்டம்பெற்றவர் ஒவ்வொருவரும் உத்தியோக வேட்டையிலேயே இருந்தால் தேசம் முன்னுக்கு வருவது மிகவும் கஷ்டம். பகுத்தறிவை உபயோகப்படுத்தவும் உலக ஞானம் அறியவும், உள்நாடு, வெளிநாடு விஷயங்களைத்தெரியவும் அனுகூலமாயுள்ள அளவான கல்வி இன்றியமையாதது. வியாபாரிகளாகிய உங்களில் பெரும்பாலோர் பெற்றோர்களாகயிருக்கிறீர்கள். உங்கள் பிள்ளைகளின் படிப்பு விஷயத்தில் தக்க கவனத்தைச் செலுத்தவேண்டுமென்ற நோக்கத்துடன் இவ்வளவு சொல்லலாம் என்று மனங்கொண்டேன்.

வியாபார உலகம் தற்காலத்தில் பல துறைகளிலும் பரவி செழித்தோங்கி வருகிறது. சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் நம்மவர்கள், சீமை வியாபாரம், வெளிதேசங்களோடு கடிதப்போக்கு வரத்து என்றால் முடியாத காரியமாகவும் கஷ்டமானதும் என்று எண்ணியிருந்தார்கள். வியாபார வளர்ச்சியால் தற்போது இவைகள் எல்லாம் சர்வ சாதாரணமாகயிருக்கிறது, கைத்தொழில் முறையாக நடந்த பெரும் வியாபாரங்கள் எல்லாம் இப்போது இயந்திரங்களினால் நடைபெறுகின்றன. இதனால் சாதகங்களும் பாதகங்களும் ஏற்பட்டிருக்கின்றன. இருந்தாலும் உலகப்போக்கை அனுசரித்து நம் வியாபாரத்தையும் நாம் நடத்தவேண்டும்.

வியாபாரத்தில் ஒரு பகுதியாக நாணயமாற்றம் (exchange) என்பது மிகவும் சிக்கலான விஷயம். பொருள் ஆதார நூலை வாசிக்கும்போது, மேதாவிகள் எல்லாம் சில சமயங்களில் திகைத்துவிடுகிறார்கள். இந்நூல் வல்லாரைக்கொண்டு நாணயமாற்றத்தின் நுணுக்கங்களை நீங்கள் தெளிவுற அறிந்துகொள்வது அவசியமாயிருக்கிறது. வெளிநாடுகளில், படித்தவர்கள் எல்லாம் வியாபாரத்துறையில் இறங்கி தீவிரமாக உழைத்து வருகிறார்கள். நம் நாட்டிலோ வியாபாரம் என்பது படிக்காதவர்களுக்குத்தான் என்றும், படித்தவர்கள் உத்தியோகத்திற்குத் தான் போகவேண்டும் என்ற மனப்பான்மையிருக்கிறது. இதை உடனே மாற்றவேண்டும். நம் தேசமும் சர்வ தேசங்களோடு சமமான உரிமையை பெறவேண்டுமானால் வியாபாரத்தில் முன்னுக்கு வந்தால்தான் முடியும். ஆங்காங்கே சங்கங்கள் ஸ்தாபனமாகி மாகாண சமகங்கள், தேசிய சங்கங்கள்(Chamber of Commerce) இவைகளோடு இணைக்கப்பட்டு, நல்ல பிரதிநிதிகளின் மூலியமாய் நமது முடிவான அபிப்பிராயங்களை தெளிவாகவும், அழுத்தமாகவும் சொல்லவேண்டும். இதைச் செய்வதில் எத்துணையும் பின்தாங்க கூடவே கூடாது. "ஒன்றுபட்டாலுண்டுவாழ்வே, நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே." என்று பெரியார் கூறியிருக்கின்றார், வியாபாரிகளுக்குள் அதிதீவிர ஒற்றுமை மிகவும் அத்தியாவசியமானது.

இக்காலத்தில் தபால் தந்தி இலாகாவில் ஏராளமான வசதிகள் ஏற்பட்டிருப்பதால் இந்த வசதிகளை கையாண்டு வியாபாரத்தை மென்மேலும் பெருக்குவதற்கு முயற்சி செய்யவேண்டும். 5000, 6000, மைல்களுக்கு அப்பாலுள்ள தேசங்களுடன் நேருக்கு நேரா கப்பேச டெலிபோன் (Telephone) வசதியும் ஏற்பட்டிருக்கிறது. சமாசாரப் பத்திரிக்கைகள் மூலியமாக இதர தேசத்து வர்த்தமானங்களையும், கப்பற் செய்தி முதலியவைகளையும் உடனுக்குடன் தெரிந்துகொள்கிறோம். இவைகள் எல்லாம் வியாபாரத்திற்கு அனுகூலமானவைகள்.

தீர்க்கமாக ஆலோசித்தோமானால் இனிவரக்கூடிய மாறுதல்களில், வியாபாரிகளே முதன்மை ஸ்தானங்களையும், பதவிகளையும் பெறுவதற்கு உரிமையுடையவராவார்கள். புதிய சீர்திருத்தங்கள் சமீபத்தில் வரப்போகின்றன. வியாபாரிகளுடைய நன்மைகளை பாதுகாக்கக்கூடிய பிரதிநிதிகளையே நீங்கள் மத்திய சட்ட சபைக்கும் மாகாண சட்டசபைக்கும் அனுப்பவேண்டும். தலைவர்கள் என்று சொல்லிக்கொண்டு தங்கள் சுயநலத்தையும், பொருள் ஈட்டும் வருவாய்களையும் நாடியிருக்கும் நபர்களை சட்ட சபைகளுக்கு அனுப்புவதில் ஒன்றும் பிரயோஜனமில்லை. மேலும் பலவித கௌரவ வேலைகளை ஒரு மனிதர்க்கு கொடுப்பதிலும் அநேக கெடுதல்கள் ஏற்பட்டு, ஒரு ஸ்தானமாவது சரிவர பராமரித்துவர ஏதுவில்லாமலிருக்கிறது. சட்டசபைகளிலும், இதர ஸ்தாபனங்களிலும் இருக்கும் பிரதிநிதிகள் தங்கள் கடமைகளை சரிவர செய்கிறார்களா என்று கூர்ந்து கவனித்தல்வேண்டும்.

ஒரு தேசத்தின் பொருளாதார நிலைமையை அதன் வியாபார நிலைமையிலிருந்து கண்டுகொள்ளலாம், விற்பனை என்பது வியாபாரத்தின் ஒரு பகுதியாகும். முதலில் உற்பத்தியைக் கவனிக்கவேண்டும். வியாபாரத்திற்கும், உணவிற்கும் வேண்டாத சாமான்களை உற்பத்தி செய்வதில் யாதும்பயனில்லை. வெளிநாடுகளில் முக்கியமாக அமெரிக்காவில் பெரும் வியாபாரிகள் உற்பத்தியைத்தான் பெரிதும் கவனிக்கிறார்கள். வியாபாரத்திற்கு உகந்த விளைபொருள்களை உற்பத்திசெய்யும்படி அவ்வப்போது சொல்லி வருகிறார்கள். இதனால் அநேக நன்மைகள் ஏற்படுகின்றன.

நமது தேசத்தில் உண்டாகும் விளைபொருள்களை தக்க வழியில் விற்பனையாக்கவேண்டுமென்று மத்திய சர்க்கார் (Central Marketting Officer) என்று ஒரு உத்தியோகஸ்தரை நியமித்திருக்கிறார்கள். இதே மாதிரி ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒரு உத்தியோகஸ்தரை நியமிக்கப் போகிறார்கள். இந்த உத்தியோகஸ்தரோடு இந்த சங்கமும் கடிதப்போக்கு வரத்து வைத்துக்கொண்டால் பல விதத்திலும் நன்மை ஏற்படுமென்றுஅபிப்பிராயப்படுகிறேன். சென்ற வருஷத்தில் சென்னை மாகாணத்தில்விளையும், பருத்தி, புகையிலை, நிலக்கடலை மாசூல்களை விற்பனை செய்யும் விஷயமாக திட்டம் ஏற்படுத்தி சட்டசபையில் (Commercial Crops Act) என்ற சட்டம் நிறைவேற்றப் பெற்றிருக்கிறது. இந்த சட்டம் சமீபத்தில் அமுலுக்குவரும். இதனால் இந்த விலை பொருள்களை நல்ல விலைக்கு விற்கும் வழிகளைத் தேடலாம். இதுவல்லாமல் இப்பொழுது சிம்லாவில் விளைபொருள்கள் பயிரிடும் முறையை நிச்சயிக்க (Crop Planning Conference) மத்திய சர்க்கார் கூடியிருக்கிறார்கள். நாளை மறுதினம் பிரமுகர்கள் கூடி தீர்மானத்திற்கு வருவார்கள். ஜப்பான் அரிசி இறக்குமதியைப் பற்றியும் மத்திய சர்க்கார் கவனித்து வருகிறார்கள். இதைப்பற்றி நம் மாகாண பிரதிநிதி திவான்பகதூர் A. ராமசாமி முதலியார் அவர்கள் உழைப்பை நீங்கள் பாராட்டுவீர்கள் என்று நம்புகிறேன்.

சரக்குகள் ஏற்றுமதி இறக்குமதிக்கு வேண்டிய சௌகரியங்களை செய்து கொடுக்கும்படி சங்கத்தின் மூலியமாக ரயில்வே அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டால், அவர்களும் கட்டாயம் கவனிப்பார்கள். உங்கள் முயற்சியால் நிருவப்பெற்ற Merchants Bank நன்றாக வேலைசெய்து வருகிறதென்று கேட்க நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன்.

உங்கள் சங்கத்தின் ஆதரவில் அடிக்கடி பொதுக்கூட்டங்கள் கூடி முக்கியமான வியாபாரங்களைப்பற்றி பிரசங்கம் நடத்திவந்தால் தக்கபலனை அளிக்கும் என்று நம்புகிறேன். **திருச்சியில் நமது நண்பர் திருவாளர் டி. வி. கே. நாயுடு அவர்கள் நடத்திவரும் "வர்த்தக ஊழியன்" பத்திரிகையை நீங்கள் எல்லோரும் ஆதரித்து வருவது மிகவும் பாராட்டத்தக்கதே இந்த மாதிரியான பத்திரிக்கை முன்னணிக்கு வருவது திண்ணம்.**

மற்றொரு விஷயத்தைப் பற்றியும் இங்கேகூற விரும்புகிறேன். எந்த வியாபாரத்திற்கும் தக்க விளம்பரம் வேண்டும். ஆரம்பத்தில் இந்த செலவு கைப்பொறுப்பாகத் தோன்றினும் கடைசியில் நல்ல விளம்பரமே தக்க ஊதியத்தைக் கொடுக்கும். மேல்நாட்டார், வியாபாரத்தின் கொள்முதலுக்கு சமமான தொகையை, விளம்பரத்தில் செலவிடுவது நாம் கண்கூடாகக் கவனிக்கிறோம்.

இன்னும் மற்ற விஷயங்களைக் கூறி உங்கள் காலத்தை வீணாக்க எனக்கு விருப்பமில்லை. இறுதியாகக் கூறுமிடத்து உங்கள்பால் ஒன்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஒருவர்மீது ஒருவருக்கு அத்யந்த நம்பிக்கை யிருக்கவேண்டும், எல்லோரும் கூட்டுறவோடு இருக்கவேண்டும். நாணயம் நிலவவேண்டும். இத்தகைய அருங்குணங்கள் மலிந்து கிடக்குமேயானால் நமக்கு ஒருக்காலும் கஷ்டம் வராது. பலவகையிலும் செழித்தோங்க இவைகள் ஏற்ற சாதனங்களாகும்.

அன்பர்களே!

இந்த வைபவத்திற்கு என்னை தலைமை வகிக்கும்படி வரவழைத்ததற்காக தங்களுக்கு வந்தனம் செலுத்துகிறேன். சமீபத்தில் தாங்கள் எல்லோரும் ஒற்றுமையாகயிருந்து எனக்கு அளித்தபெரும் உதவிக்கு மீண்டும் ஒருமுறை என் மனப்பூர்வயான நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். இறைவன் திருவருளால் தங்கள் சங்கமானது, நாளுக்கு நாள் அபிவிருத்தி யடைந்து, சங்கத்தின் முயற்சியால் இப்போது இருக்கும் மெம்பர்களும், இனி சேரும் மெம்பர்களும் எல்லாவித ஆக்கங்களையும் நிறம்பப் பெற்று நீடூழிவாழவேண்டுமென்று வழுத்தி எனக்கு கொடுத்த வரவேற்புப் பத்திரத்திற்கும், என்மேல் பாடிய பாமாலைக்கும் நன்றியறிதலை தெரிவித்துக்கொண்டு என் சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

திருவாளர்கள். கி. ஆ. பெ. விஸ்வநாதம், பட்டுக்கோட்டை அழகர்சாமி முதலானோர் வர்த்தக அபிவிருத்தியைப் பற்றி பேசினார்கள். வந்தனோபசாரத்துக்கு பின் கூட்டம் கலைந்தது.

"பெரிய அணிகலன்"

வர்த்தக ஊழியனின் மே, ஜூன்மாத இதழ்கள் வரப்பெற்றோம். இப்பத்திரிகையில் இந்திய வர்த்தக சம்பந்தமான எல்லா விஷயங்களும் வெளியாகின்றன. ஒவ்வொருஊரிலும் ஏற்படக்கூடிய வர்த்தக நிலைமையை மிகத் தெளிவாக எடுத்துக் கூறுவதோடு, வர்த்தக முன்னேற்றத்திற்கு ஒரு பெரிய அணிகலனாக இப்பத்திரிகை விளங்குவது மிகவும் போற்றத்தக்கது—**ஜ்யோதிஷ போதினி.**

உலக விநோதங்கள்.

(எம். எஸ். ஆர். சந்திரன்.)

தாலிகட்ட விறகுக்கட்டா.

பசிபிக் சமுத்திரத்தில் சைன பிரதேசத்தின் கிழ்ப்பக்கமாக பார்மோஸா என்றொரு தீவு இருக்கிறது. ஒரு பெண்ணை விவாகஞ்செய்துகொள்ள ஒரு ஆண்பிள்ளை பிரியப்பட்டால் அவனே முதலில் தனது அபிப்பிராயத்தை வெளியிடல்வேண்டும். எந்தப்பெண்ணை விவாகம் செய்துகொள்ள விரும்புகிறானோ அந்தப்பெண்ணின் வீட்டு வாசலில் ஒரு நாள் இரவில் ஒருகட்டு விறகைக் கொண்டுபோய் வைத்துவிட்டு வரவேண்டும். அந்த விறகுகட்டை வீட்டுக்குள் எடுத்துச்சென்றால் கலியாணம் செய்துகொள்ள சம்மதித்து விட்டதாகத் தீர்மானித்துவிடலாம். விறகுகட்டு வீட்டினுள்ளே கொண்டுபோகப்படாவிட்டால் அந்த ஆண் பிள்ளையை மணந்துகொள்ள அப்பெண்ணுக்கு மனமில்லை என்று அறிந்துகொள்ள வேண்டுமொம். விறகு கட்டை ஏற்றுக்கொண்டால் இரண்டொரு தினங்களுக்குள் அந்த ஆண் பிள்ளைக்கு அழைப்பு ஏற்பட்டு விருந்தும் நடைபெறும். இதன் மூலமே விவாக பந்தம் (கட்டு) ஏற்படுகிற வழக்கம் அத்தீவில் இருந்து வருகிறது.

கால் கட்டைவிரலுக்கு மதிப்பு.

இங்கிலாந்து தேசத்தில் ஒரு நியாயஸ்தலத்தில் **கான்ஸ்டாம்** என்ற நீதிபதி முன்னிலையில் ஒரு விநோதமான வழக்கு விசாரணைக்கு வந்து முடிவுற்றது. நிலக்கரி சுரங்கத்தில் வேலைசெய்கிற **வில்லியம்ஸ்** என்றவர் இதில் வாதி. **லேம் ஹேளஸ்** என்ற ஊரில் நிலக்கரி சுரங்கத்தில் வாதி வேலை செய்துகொண்டிருக்கும்போது ஒரு விட்டம் அவர் வலதுகாலில் விழுந்துவிட்டது. அதனால் அவரது கால் கட்டை (பெரு) விரல் நசுக்குற்று அவ்விரலின் முக்கால் பாகம் சேதனஞ்செய்யப்பட்டது. அங்ஙனம் சேதிக்கப்பட்டதால் அதற்கு நஷ்ட ஈடு உத்திரவாகவேணுமாய்க் கேட்டிருந்தார். 325 பவுன்கள் (4875 ரூ.) கொடுக்கவேணுமென்று நீதிபதி உத்திரவிட்டார். சுரங்க கம்பெனியார் அவன் ஆயுள் உள்ளவரை வாரம் 30 ஷில்லிங்வீதம் கொடுக்க ஒப்புக்கொண்டதால் இத்தொகையைக் கொடுக்க அவசியமில்லாது போயிற்றாம்.

தகப்பனால் பையனுக்கு நஷ்டஈடு

மான்செஸ்டர் நகருக்கருகில் (இங்கிலாந்தில் லங்காஷையர் ஜில்லாவில் உள்ளது.) ஆல்பர்ட் எட்வர்டு லாயிட் மோட்டார் ஓட்டிச்சென்றார் என்றும், அவ்வண்டியில் அவரது பத்துவயதுள்ள பர்ட்ராம் லாயிட் என்பவரும் உட்கார்ந்து சென்றதாகவும் மோட்டார் லாரியின் மீது வண்டி மோதவே வண்டியின் முன் பக்கமிருந்த கண்ணாடி உடைந்து அதன் தூள் பையனது இடது கண்ணில் குத்தியதாகவும், அதன் காரணத்தால் கண்ணை எடுத்துவிட நேரிட்டதென்றும், அசட்டையாக தகப்பன் மோட்டார் ஓட்டியதால் பையனின் கண்போய் விட்டதென்று காரணங்காட்டி கோர்ட்டில் நீதிபதி பையனுக்குத் தகப்பன் 1000 பவுனும் கோர்ட்டு செலவும் கொடுக்க வேண்டியதென்று தீர்ப்பு செய்துவிட்டார்.

மேனாட்டு வாழ்க்கையின் அளவு.

பிரான்சு தேசத்து புள்ளிக்கணக்கு நிபுணர் பின்வருமாறு தெரிவிக்கிறார்:— பிரான்சு தேசத்தில் 50 வயது சென்ற ஒரு மனிதன் 6000 நாட்கள் தூங்கினான் என்றும், 6500 நாட்கள் வேலை செய்தான் என்றும், 800 நாட்கள் நடையில் கடந்தனவென்றும், 4000 நாட்களில் கண்டு களித்தான் என்றும், 1500 நாட்கள் சாப்பாட்டில் (நீண்டநேரம் உண்பவர்கள் மேனாட்டார்) சென்றிருக்க வேண்டுமென்றும், 500 நாட்கள் வியாதியில் பீடிக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்றும், கூறுகிறார். மேலும் அவன் 17,000 பவுண்டு எடையுள்ள ரொட்டியும், 16,000 பவுண்டு நிறையுள்ள மாமிசங்களையும், 4600 பவுண்டு எடையுள்ள காய்கறிகள், முட்டைகள், மீன்கள் வகையறாக்களையும் சாப்பிட்டும், 7000 காலன் நிறையுள்ள ஜலம், தேத்தண்ணீர், காபி, பீர்முதலிய மதுபானங்களைக் குடித்திருப்பான் என்று திட்டமாகக் கூறுகிறார்.

லட்சக்கணக்கில் புஸ்தகங்கள்.

லெனின் கிராட் என்ற நகரில் உள்ள பொது வாசகசாலையில் 48 லட்சம் புஸ்தகங்கள் இருக்கின்றன. பாரிஸ் 'நாஷனேல்' புஸ்தகசாலையில் 40 லட்சம் இருக்கின்றன. லண்டன் பிரிடிஷ் கண்காட்சி புத்தக நிலயத்தில் 30 லட்சத்துக்குமேல் இருக்கின்றனவாம்.

எலிகளின் குடும்ப விர்த்தியின் மர்மம்.

இரு எலிகள் மூலம் ஒரு வருஷத்தில் 100 எலிகள் உற்பத்தியாகின்றன. ஒரு எலி உற்பத்தியானதும் நான்காவது மாதத்தில் அதற்கு குழந்தைகளும் பேரப்பிள்ளைகளும் ஏற்பட்டு விடுகின்றனவாம். அதற்கு கர்ப்பத்தடை இல்லாவிட்டால் இரு எலிகள்மூலம் அதன் சிறுகுடும்பம் 2021 நபர்கள் அடங்கிய பெருங் குடும்பமாகிவிடுமொம்.

வைரக்கல்லின் பெருமை.

தென் ஆப்பிரிக்காவில் 3025 காரட் உள்ளதும், $1\frac{3}{4}$ பவுண்டு நிறையுள்ளதுமான "**குல்லிநான்**" என்ற வைரக்கல்லை 1907 ஆம் வருஷத்தில் ஏழாவது எட்வர்டு அரசருக்கு ட்ரான்ஸ்வால் கவர்ன்மெண்டார் வெகுமானமாகக் கொடுத்தனர். இதன் பெரும்பாகமான வைரக்கல் பிரிடிஷ் செங்கோலிலும், அதற்கு அடுத்த பெருங்கல் பிரிடிஷ் அரசரது கிரீடத்திலும் வைத்து பதிக்கப்பட்டிருக்கின்றன.

75 மைல் நீளமுள்ள தலைமயிர்.

மனிதர்களின் நிறத்துக்கும், தலையின் அமைப்புக்கும் தக்கபடியாக தலைமயிர்களின் எண்ணிக்கை வித்தியாசப்படும். கருமயிர் நிறைந்து அழகுள்ள பெண்களின் தலையில் 1,40,000 முதல் 1,60,000 வரை மயிர்கள் நிறைந்திருக்கக் காணலாம். சிகப்பு மயிர் நிறைந்துள்ள தலையில் 30,000 முதல் 60,000 வரை இருக்கின்றனவாம். சராசரி மயிரின் நீளம் 36 அங்குலம் என்று மேனாடுகளில் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு யௌவன பருவமுள்ள ஸ்திரீயின் தலையில் உள்ள மயிர்களை ஒன்றன்பின்னொன்றாக வைத்துப்பார்த்தால் சுமார் 75 மைல் தூரத்துக்கு வைக்கத்தகுந்த கூந்தல் இருப்பதாகக் கணக்கெடுக்கப் பட்டிருக்கிறதாம்.

200 அடிக்கு மேற்பட்ட கல் வளைவுப் பாலங்கள்.

இங்கிலாந்தில் செஸ்டரில் பெரிய கல் வளைவுப் பாலம் ஒன்று இருக்கிறது, அதன் நீளம் 200 அடி. லண்டனில் சவுத்வார்க் பாலத்தின் மத்தியில் வளைவு இரும்பால் செய்யப்பட்டது. அதன் நீளம் 240அடி. குறிப்பு:-பால வளைவுக்கு "கணவாய்" என்று சொல்வதுமுண்டு.

மதிப்புரைகள்.

REVIEWS.

Reliance Economy Year Book.

The Reliance Economy year Book, published by the Bombay Publicity Service, 60, Tamarind Lane, Fort, Bombay, will help an average family to keep an eye on daily household and personal expenses in a systematic manner and to check a waste of hard earned money after unnecessary expenses. Inaddition lists of Banks, Coal, Insurance, Jute and Tea companies, Textile mills, and other particulars are published. It will serve as a reference book for people in every walk of life. It is priced Rs. 1—4—0.

Book of horoscope

The book of Horoscopes, which we have received from Kshatriya Research Society, Elgin Road, Delhi contains calendar for 200 years and also horoscopes, which every one can see at a glance. The same can be had by sending two annas stamp.

Business Enterprise

Those who want to be a successful trader should study 'Business Enterprise' published by B. Sanyasi It is a valuable and well thought out work, written after his wide travel and experience. It is priced Rupee one and can be had at No. 5 Richmond Road, Bangalore.

Cleanso

We have received a sample packet of Cleanso from Tomara's Ayurvedic Pharmacy, Elgin Road, Delhi. It gives brightness when rubbed on glass, and gold ornaments. One lb costs Rupee one only.

Guide to manufacture of Soaps.

The book "A Short Guide for the manufacture of Soaps and Allied Products" by Mr. A. N. Ghose deals in Soap making which will be of immense help to the earnest and progressive businessmen and to the unemployed. It also contains a good number of workable formulae for the manufacture of many other allied subjects. The book is written with his 8 years experience in the continent The book is priced Rupees. Two and can be had from Mr. Ganga Ram Khannah, Englishia Line, Benares Cantt.

Hyderabad Today.

The book is a reprint from the "Feudatory and Zamindari India" It contains the main features of administration in Hyderabad state and the progress, which the State has attained under H. E. H the Nizam for the past two decades. The book can be had from Mr. A. Padmanabha Iyer, Karamanai, Trivandrum.

Sesame Oil

We were in receipt of a sample bottle of Sesame oil one of the products from The Warora oil mills, Station Road, Warora (C. P.) They are also suppliers of Roatary Mowda oil cakes. It appears to be of good quality.

"Estrella" Cells

We acknowledge receipt of samples of Estrella cells from the Jasco Chemicals and Allied Industries Co., 49, Dockyard Road, Bombay. They have all the brilliance of Electricity. Being an Indian Concern, it deserves all encouragement.

Arts, Crafts & Industry.

We have received a copy of a Handbook of Information on Arts, Crafts & Technical Industries from Maneck Pheroze Mistry Honorary Secretary, Maneckji Nowroji Sett Polytechnic Institute Rampart Row, Bombay. It contains the history of the various institutions already existing in different parts of India, where instructions in arts & crafts and technical industries is imparted on systematic and scientific lines. The book will be a guide to those who wish to be proficient in useful arts & industries.

Patent, Trade Marks & Designs.

The handbook on Patents, Trade Marks & Designs by Mr. Gee contains the proceedure to be followed in patenting inventions and registering Trade Marks & Desgins. Many instances are given of famous Trade Marks. It will be a very useful guide to those interested in that business. It is priced sh. 5 & can be had from Messrs Gee & Co., 51 & 52 Chancery Lane, London W. C. 2.

Japan Directory

The Japan Directory contains the addresses of the merchants in Japan. This book will be a key to Businessmen, who are in search of big merchants in that land. The price is Rupee one and can be had from Sinha & Sons Sinha Buildings, Indore city.

வருடாந்திர அறிக்கை.

கொழும்பு, இலங்கை நாட்டுக்கோட்டை செட்டியார்கள் சங்கத்தின் ஆங்கீரச-ஹூ பங்குனி-மீ 19-உ முதல் ஸ்ரீமுக-ஹூ பங்குனி-மீ 18-உ வரையுள்ள மூன்ருவது அறிக்கை (ஏழாவது ஆண்டு) வரப்பெற்ருேம். பிரஸ்தாப ஆண்டில் நடைபெற்ற விஷயங்கள் இதில் காணப்படுகின்றன.

தாயும் பிள்ளையும்.

இந்திய தாய்மார்கள் கர்ப்போற்பத்தியான காலந்தொட்டு பிரசவகாலம்வரையில் நடந்துகொள்ளவேண்டிய முறைகளையும் பின் பிள்ளை வளர்க்கும் சுகாதார முறைகளையும் தெரிந்துகொள்ள திரு. இராசரத்தினம் தமிழில் சுலபமாக எழுதியுள்ளார் விவாகமான இளம் பெண்கள் அவசியம் இப்புஸ்தகத்தை வாசிக்கவேண்டும். இதில் சொல்லியுள்ளபடி நடந்தால் சிசுக்கள் அகால மரணமடையாது. இதன் விலை சதம் 50. கிடைக்கு மிடம் :—ச. இராசரத்தினம், ஆஸ்பத்திரி பங்களா, வாட்டவாலா (Watawala) இலங்கை.

ஸ்ரீகூர்மபுராணம்

ஸ்ரீவத்ஸ வெ. ஸோமதேவ சர்மா அவர்களால் எழுதப்பட்ட ஸ்ரீகூர்மபுராணம் நமது பார்வைக்கு அனுப்பப்பட்டது. சமஸ்கிருதத்தில் சுமார் 5000-க்கு மேற்பட்ட சுலோகங்களுடனிருப்பதை தமிழில் வசனநடையில் சுருக்கமாகவும் சுலபமாகவும் படிக்கும்படி எழுதப்பட்டிருக்கின்றன. ஆஸ்திக நண்பர்களுக்கு மிகவும்உபயோகப்படக்கூடியது. இதன் விலை அணு ஆறு. சென்னை தம்பு செட்டி வீதி 154 நெ. கட்டிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஸ்ரீஅமரகலா விலாஸினீ சபையில் கிடைக்கும்.

நாணய மாற்றம்.

Exchange (30—6—34)

பென்சு

பாங்ரேட் லண்டன் தந்தி 18
பாங்ரேட் லண்டன் தரிசனம் 18
லண்டன் தந்தி விற்கிற விலை 18 1/32
தரிசன உண்டி விற்கிற விலை 18 1/32

லண்டன்—அமெரிக்கா மேல் தந்தி ஸ்டர்லிங் பவுன் 1-க்கு டாலர் 5-05$\frac{3}{8}$

பாரிஸ் லண்டன் மேல் தந்டி ஸ்டர்லிங் பவுன் 1-க்கு பிராங்கு 76-9/16

பிரான்ஸ் மேல் தரிசன உண்டி விற்பனை ரூ. 100-க்கு பிராங்கு 560.

ஜர்மன் தரிசன உண்டி விற்பனை ரூ 100-க்கு மார்க்கு 92

அமெரிக்கா தரிசன உண்டி விற்பனை டாலர் 100-க்கு ரூ. 268

அமெரிக்கா தரிசன உண்டி வாங்குவது டாலர் 100க்கு ரூ 257

சிங்கப்பூர் தரிசன உண்டி விற்பனை டாலர் 100-க்கு ரூ. 157$\frac{1}{4}$

சிங்கப்பூர் தரிசன உண்டி வாங்குவது டாலர் 100-க்கு ரூ. 150

ஹாங்காங் தந்தி அல்லது தரிசன உண்டி விற்பனை டாலர்100க்கு ரூ. 103

ஷாங்காய் தந்தி அல்லது தரிசன உண்டி விற்பனை டாலர் 100க்கு ரூ. 94

ஜப்பான் தந்தி அல்லது தரிசன உண்டி விற்பனை என் 100-க்கு ரூ. 85

ஜப்பான் 2-மாததவணை உண்டி வாங்குவது என் 100-க்கு ரூ. 100.

ஜாவா தந்தி அல்லது தரிசன உண்டி விற்பனை ரூ. 100-க்கு கில்டர் 56

ஜாவா தந்தி அல்லது தரிசன உண்டி வாங்குவது ரூ. 100-க்கு கில்டர் 100

குறைந்த செலவில்
நிறைந்த லாபம் பெற விரும்பினுல்
வர்த்தக ஊழியனில்
விளம்பரம் செய்யுங்கள்.

பத்திரிகைகளின் வரவு.

(Publications Received)

London Chamber of Com-
Indian Mirror [merce Journal
Indian Finance
Industry
Indo-Malaya Review
Mysore Chamber of Commerce
Guardian [Bullettin.
Barclays Bank Monthly
Railway Herald [Review
The Produce Markets Review
Barclays Bank Monthly Trade
Yoga [Cables
London Indian Chamber of
[Commerce Trade Notes
Standard Bank Monthly
World Trade [Review

அமிர்தகுணபோதினி
அறிவுவிளக்கம்
ஆனந்தபோதினி
ஆர்யதர்மம்
இந்தியா
ஈழகேசரி
குமரன்
குமாரவிகடன்
சீர்திருத்தம்
சுதந்திரம்
சுதேசநாட்டியம்
செங்குந்தமித்ரன்
தமிழ்நாடு
தமிழ்ச்செல்வன்
தமிழன்
திருக்குறட் குமரேச வெண்பா
திருவாங்கூர் அபிமானி
தொண்டுசெல்வம்
தேசநேசன்
நகரதூதன்
பர்மாநாடு
புரட்சி
வம்பன்
விசித்திரன்
விஜயபாரதி
விநோதன்
விநோதநேசன்
ஜகன்மோகினி
ஜ்யோதிஷ போதினி
ஜீவரக்ஷகன்
ஹாஸ்யன்

உலக வர்த்தகம்.

(WORLD TRADE.)

நியூஜீலண்டு (Newzealand) ஜனவரி பிப்ரவரி மாத வர்த்தகம் நியூஜீலண்டு தேசத்தில் இறக்குமதியைவிட ஏற்றுமதியில் 6,526,000 பவுன் அதிகம்

ஆஸ்திரேலியா (Australia) ஆஸ்திரேலியாவின் வர்த்தகம் சாதகமாகவேயிருந்து வருகின்றன. பிப்ரவரி மாதம் முடிய ஏற்றுமதியில் 14,563,000 பவுன் அதிகமும் இறக்குமதியில் 659,000 பவுன் குறைவும் ஏற்பட்டிருக்கிறது.

மெக்சிகோ (Mexico) உலகத்திலே பெட்ரோலியம் உற்பத்தி செய்யும் 25 தேசங்களில் மெக்சிகோதேசம் பத்து வருடங்களுக்குமுன் இரண்டாவது ஸ்தானத்திலிருந்தது ஆனால் இப்பொழுது ஏழாவது ஸ்தானத்திலிருக்கின்றன.

காஸ்டோரீகா (Costa Riga) 1929ம் வருடமுதல் காஸ்டோரீகா யதசத்தில் வர்த்தகம் குறைந்துகொண்டே வருகிறது. இந்த தேசத்துக்கு அமெரிக்கா நாடு அதிகமாக சாமான்கள் சப்ளை செய்கின்றன. அடுத்தபடியாக இங்கிலாந்து தேசம்.

லிதுவானியா (Lithuania) 1932 வருடத்தைவிட 100-க்கு 15-வீதம் லிதுவானியா தேச வர்த்தகம் 1933ம் வருடத்தில் குறைந்துபோயிற்று. இரும்பு, ஒழுங்கு படுத்தாத தோல்களும் அதிகமாக இறக்குமதி செய்யப்பட்டன.

ஹங்கேரி (Hungary) ஹங்கேரி தேசத்து வர்த்தகம் 1933ம் வருடத்தில் இறக்குமதியில் உயர்வும் காணப்படுகிறது. தேக்கு, நிலக்கரி, உப்பு, எலக்டிரிகல் சாமான்கள் குறைவாகவும் பருத்தி, பட்டு, கம்பளி நூல் அதிகமாகவும் இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன.

பின்லண்டு (Finland) மற்ற நாடுகளைப்போலில்லாமல் பின்லண்டு தேசத்தில் 1932-ம் வருடத்தைவிட 1933-ம் வருடத்தில் அதிகமாக வர்த்தகம் நடைபெற்றிருக்கிறது: இறக்குமதி 1932ல் 3502 3 மிலியன்மார்க். 1933ல் 3962 மிலியன் மார்க். ஏற்றுமதி 1932ல் 4631.5 மிலியன்மார்க், 1933ல் 5288.2 மிலியன்மார்க், உணவுபொருள்களும் அனுவசியமான (Luxuries) சாமான்களும் குறைவாக இறக்குமதி செய்யப்பட்டன.

பிரான்சு (France) பிரான்சு தேசத்து வர்த்தகம் சென்ற வருடத்தில் குறைவாகவே நடந்திருக்கின்றன. முக்கிய காரணம் நாணயமாற்றம். இறக்குமதியில் மற்ற தேசங்கள் ஏற்படுத்தியிருக்கும் கட்டுப்பாடுகள். இறக்குமதி 1932ல் 29808 மிலியன் பிரான்க்கு, 1933ல் 28425 மிலியன் பிரான்க்கு. ஏற்றுமதி 1932-ல் 19706 மிலியன் பிரான்க்கு, 1933ல் 18433 மிலியன் பிரான்க்கு. அல்ஜீரியா தேசம் பிரான்சு தேசத்துடன் மற்ற தேசங்களைவிட அதிகமாக வர்த்தகம் செய்திருக்கின்றன.

பிரேஜில் (Brazil) பிரேஜில் தேசத்தில் செல்வ நிலைமையின் காரணமாகவும் அன்னியநாட்டு நாணயமாற்றத்தின் காரணமாகவும் விலைகளில்மாறுதலடைகின்றன. ஜனவரி பிப்ரவரி மாதத்தில் சென்ற வருடத்தில் 2,382,000 சரக்குகள் அனுப்பப்பட்டன. பிரேஜில் நாணயப்படி 336,350 கண்டோஸ், பவுனுக மாற்றினால் 5.197.000 பவுன் பிரஸ்தாபவருடத்தில் 3251 சரக்குகள் அனுப்பப்பட்டன. 468,352 கண்டோஸ், 4,971,000 பவுன் 132,002 கண்டோஸ் அதிகமாக கிடைத்தாலும் 226000 பவுன் குறைந்துவிட்டது.

தென் ஆப்பிரிக்கா (South Africa)

தென் ஆப்பிரிக்கா யூனியனிலும் சுவாஜி தேசத்திலும் 2127 பேல் பருத்தி கிடைக்குமென்றும் சென்ற வருடத்தில் 1488 பேல் கிடைத்ததென்றும் தெரிகிறது பழவகைகளில் ஏப்பிரல் மாதம் முடிய 66388 டன் ஏற்றுமதி சென்ற வருடத்தில் 54033 டன் சர்க்கரை விலையில் யாதொரு மாறுதலும் கிடையாது. ஏப்பிரல் மாதத்தில் 13000 டன் சர்க்கரை விற்பனையாகியிருக்கிறது. கம்பளி விலையில் மாறுதல் கிடையாது, மார்ச்சு மாதத்தில் 615598 டன் நிலக்கரி ஏற்றுமதி செய்யப்பட்டன. சென்றவருடத்தைவிட 85114 டன் அதிகம் மோட்டார்கார்கள் ஏராளமாக வந்து கொண்டிருக்கிறது. 1934-ம் வருடத்தில் முதல் மூன்று மாதங்களில் 5392 புதிய கார்கள் பதிவு செய்யப்பட்டன. இதே காலத்தில் சென்ற வருடத்தில் 3557 கார்கள்.

எகிப்து (Egypt.)

எகிப்து தேசத்தில் செப்டம்பர் 33 முதல் ஏப்பிரல் 34 முடிய பருத்திவிதைகள் 2,629,423 ஆர்டப்சு ஏற்றுமதி செய்யப்பட்டது. முந்தின வருடத்தில் 1,534,138 ஆர்டப்சு பருத்தி ஏற்றுமதி 7,240,021 கன்டாரஸ் சென்ற வருடத்தில் 4,513,798 கன்டாரசு. பருத்தி துணிகள் ஜப்பான் விலைகளைவிட குறைவாகவேயிருக்கின்றன. கையிருப்பு அதிகம். ஜாவாசர்க்கரை டன் 125 ஷில்லிங்கு வீதம் விற்கப்படுகிறது. காப்பி அதிகமாக செலவாகவில்லை. அரிசி வியாபாரத்தில் மாறுதல் கிடையாது.

பாலஸ்தீனம் (Palestine)

பாலஸ்தீனத்தில் பழவகைகள் உற்பத்தி காலம் ஏப்ரல் மாதம் 18-உ முடிவாயிற்று. 5,414,027 கேசுகள் ஏற்றுமதி செய்யப்பட்டன இவைகளில் திராக்ஷை 350,000 கேசுகள், எலுமிச்சை 14,000 பாக்கி ஆரஞ்சு. இங்கிலாந்திற்கு கேசு ஒன்றுக்கு 11 ஷில்லிங் 6 பென்சு முதல் 12 ஷில்லிங் 6 பென்சு வரையில் விலையும், ஜர்மனிக்கு கேசு ஒன்றுக்கு 5-50 மார்க்கு முதல் 6-50 மார்க்கு வரையில் விலையும விற்றது கோதுமைக்கு கிராக்கியிருந்தது ஆனால் பார்லிக்கு அவ்வளவு கிடையாது.

நைஜீரியா (Nigeria)

நைஜீரியா தேசத்தில் நிலக்கடலை அதிகமாக விற்பனையாகவில்லை. வாங்குபவர்களும் மிகக் குறைவு கானோ பிரதேசத்தில் டன் ஒன்று பவுன் 2-17-6 வீதம் ஏப்பிரல் மாதம் 14-உ விற்றது. லாகாஸ் பிரதேசத்தில் கோகோ டன் ஒன்று பவுன் 15-5-0 வீதமும் எண்ணை, பருப்பு டன் பவுன் 4-17-6 3-15-0 வீதமும் விற்றது

கானடா (Canada)

கானடா தேசத்தில் உற்பத்தியாகும் சாமான்கள் 1933-ம் வருடத்தில் உலக உற்பத்தியுடன் ஒப்பிட்டு பார்த்தால் 100-க்கு நிக்கல் 90, அஸ்பெஸ்டாஸ் 60, கோபால்ட் 35, துத்தநாகம் 16, தங்கம் 13, வெள்ளி 11, செம்பு 10, 1900-வருடத்தில் 64,420,877 டாலர் விலை மதிப்புள்ள உலோகங்கள் கிடைத்தன. சென்ற வருடத்தில் 220,502.096 டாலர்.

சாமான்களுக்கு ரயில்வே சார்ஜுகள் (RAILWAY RATES)

The Railway do not accept responsibility for the correctness of these quotations a reference should be made to the Local Rate Advices & Foreign Rate Circulars issued by the S. I. Ry.)

சாமான்கள்	எங்கிருந்து	எந்த இடத்துக்கு	ரேட்டு மணங்குக்கு அ.	ரேட்டு மணங்குக்கு பை	எந்த தேதியிலிருந்து	ஷரா
சிண்டர்	அங்காடிபுரம்	பொள்ளாச்சி	2	0	1–6–34	31–7–34 வரையில்
,,	கிலாம்பூர்ரோடு	,,	2	0	,,	,,
பாலஸ்டு	திருவெறும்பூர்	நாகூர்	2	0	25–5–34	31–3–35 வரையில்
,,	திருச்சி கூடுஸ்	,,	2	0	,,	,,
மூங்கில்	ஆரணிரோடு	செம்பனார்கோயில்	3	5	15–6–34	
ஓலை	முத்துப்பேட்டை	,,	2	3	,,	
தேங்காய்	பண்டாரவாடை	சென்னைபீச்	8	3	,,	
,,	பாபநாசம்	,,	8	3	,,	
,,	சுந்தரபெருமாள்	,,	8	1	,,	
விறகு	லக்கிட்டி [கோயில்	சிங்கநல்லூர்	2	6	,,	
,,	மங்கரை	,,	2	6	,,	
சாக்கு	சென்னை பீச்	ஆழ்வார்திருநகரி	12	5	1–6–34	
,,	,,	திருநெல்வேலி	11	9	,,	
மாக்னிசைட்	சேலம்மார்க்கட்	சென்னை பீச்	3	0	15–6–34	
